# கிறிஸ்தவ மெய்யியல்



யோ. கி. போல் றொகான்

## நூல் முகம்:

| | | |
|---|---|---|
| *1.* | நூற் தலைப்பு: | கிறிஸ்தவ மெய்யியல் |
| *2.* | ஆசிரியர்: | அருட்கலாநிதி யோ.கி. போல் றொகான் |
| *3.* | மொழி: | தமிழ் |
| *4.* | விடயம்: | மெய்யியல், கிறிஸ்தவ மெய்யியல் |
| *5.* | முதற் பதிப்பு: | மார்கழி, *2020* |
| 6. | பக்கங்கள்: | x + 191 |
| 7. | வெளியீடு: | நல்லாயன் நிலையம்<br>கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்<br>யாழ்ப்பாணம், இலங்கை |
| 8. | உரிமை: | வெளியீட்டாருக்கு |
| *9.* | அச்சகம்: | ஜே. எஸ். அச்சகம், பண்டத்தரிப்பு |
| *10.* | விலை: | ரூபா *300/-* |
| *12.* | தொடர்பு: | நல்லாயன் நிலையம்,<br>கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்<br>*+ 94 021 222 3677*<br>christiancivilization@outlook.com |
| ISBN: | | 978-624-96945-1-4 |

## Book Details:

| | |
|---|---|
| 1. Title of the Book: | Christian Philosophy |
| 2. Author: | Rev. Dr. J.C. Paul Rohan |
| 3. Language: | Tamil |
| 4. Subject: | Philosophy, Christian Philosophy |
| 5. First Publication: | December, 2020 |
| 6. Pages: | x + 191 |
| 7. Publisher: | Good Shepherd Centre<br>Catholic Chaplaincy, University of Jaffna<br>Jaffna, Sri Lanka |
| 8. Copy Right: | To the Publisher |
| 9. Printer: | J.S. Printers, Pandatharippu |
| 10. Price: | Rs. 300/- |
| 12. Contact: | Good Shepherd Centre<br>Catholic Chaplaincy, University of Jaffna<br>+ 94 021 222 3677<br>christiancivilization@outlook.com |
| ISBN: | 978-624-96945-1-4 |

# முன்னுரை

"மெய்யியலை விவேகமாகவும் ஒழுங்கு முறையாகவும் உபயோகித்தால், அது எப்போதும் மனிதரை உண்மையையும், மகிழ்வையும், திருப்தியையும் நோக்கியே இட்டுச் செல்லும்."[1] கார்ல் ஜஸ்பஸ் என்ற கி.பி. 20 ஆம் நூற்றாண்டின் இருத்தலியல் மெய்யியலாளரின் இக்கூற்று மெய்யியல் என்ற அறிவுத்துறையினதும், கற்கைநெறியினதும் மனித மையத்தன்மையையும், மனித ஈடுபாட்டையும் சுட்டி நிற்கிறது. இந்தவகையில் மெய்யியல் மனித அறிவிற்கும், வாழ்விற்கும் நம்பிக்கை ஊட்டுவது. மனித அறிவுக்குத் திடத்தையும், தெளிவையும் கொடுப்பது. ஒரு சிந்தனைத் துறையாக அமைந்து, வினாக்களைத் தொடுத்து, சுய சிந்தனையைத் தூண்டி, சிந்தனைத் தெளிவை ஏற்படுத்துவது. மனிதரை அறிவு ரீதியாகத் தட்டியெழுப்பி, அறிவுக்குப் புதிய செல்நெறியைக் கொடுத்து, குறுகிய வட்டத்தில் இருந்து பரந்த, விசால அறிவு நிலைகளுக்கு இட்டுச் செல்வது.

மெய்யியல் தனி நபர்களின் கடமைகளையும், அவர்கள் சமூகத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை ஒழுக்க விதிகளையும் குறித்துக்காட்டி நிற்கின்றது. தனி நபர்களின் தனி வாழ்வுடன் மட்டும் நின்றுவிடாது சமூகங்களின் மற்றும் இன, சமயக் குழுக்களின் வாழ்வு முறைமைகளுக்கும் ஒளியூட்டுவதாக அமைகிறது. அனைத்து மனிதத் துறைகளிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. கல்வி, பொருளாதாரம், அரசியல், சமயம், ஒழுக்கவியல் ஆகிய துறைகளில் அதிக செல்வாக்குடையதாகக் காணப்படுகின்றது.

மெய்யியலின் அடிப்படை நோக்கம் மனித அறிவைப் புடமிடுதலாகும். ஒரு வகையில் ஒவ்வொரு மனிதரும் மெய்யியலாளராகவே கருதப்பட வேண்டியவர். ஏனெனில் எல்லாரிடத்திலும் ஏதோ ஒரு வகையில் சிந்தனை சார் கருத்துக்களும், திறனாய்வுத் தன்மைகளும் காணப்படுகின்றன. மத்திய காலக் கிறிஸ்தவ மெய்யியலாளரான தோமஸ் அக்குவைனஸ் "மெய்யியல் பரம்பொருளினால் மனிதனுக்கு

---

1 Schilpp & Paul Arthur, (1957), *The Philosophy of Karl Jaspers*, New York: Tudor Pub. Co.,74.

வழங்கப்பட்ட ஓர் உன்னத கொடையாகும். இது இலவசமாகக் கொடுக்கப்பட்டாலும் ஓர் உயர்ந்த நோக்கம் கருதியே கொடுக்கப்பட்டுள்ளது. மனிதர் அமைதியாகவும், நிதானமாகவும், பூரணமாகவும், தாம் வாழ்கின்ற சூழலை, மற்றும் அதற்கு அப்பாற்பட்டவைகளை அறிந்து அதனூடாகப் பரம்பொருளைத் தம் வாழ்வில் கண்டு கொள்ளவும், தமது வாழ்வின் நோக்கத்தைச் செவ்வனே நிறைவேற்றி வாழவும் மெய்யியல் வழிகளைக் கற்றுக் கொடுக்கின்றது'' என்றார்.[2]

மெய்யியல் உண்மையைத் தேடுதலை தனது இயல்பான இலக்காகக் கொண்டு பயணிக்கிறது. உண்மையைத் தேடுதல் என்பது மிகுந்த இடர் நிறைந்த பயணமாகும். சவால் நிறைந்ததாகும். சமயவாதிகளும் உண்மையைத் தேடுவர். கலைஞரும் உண்மையைத் தேடுவர். விஞ்ஞானிகளும் உண்மையைத் தேடுவர். ஆனால் அவர்கள் தாம் சார்ந்த தளங்களில் இருந்தே செயற்படுவர். ஆனால் மெய்யியலாளர் மட்டும் உண்மையைத் தேடும் அறிவுநிலையை சுயாதீனமானதாக, புறவயமானதாக, பகுத்தறிவு சார்ந்த விசாரணையாக வைத்து தமது தேடலில் பயணிப்பர். உண்மை பற்றிய அறுதியான விளக்கம் கிட்டாவிட்டாலும், மெய்யியலின் இடைவிடாத உண்மையைத் தேடும் முயற்சியின் மூலமாக காலத்துக்குக்காலம் உண்மை பற்றிய சில வெளிச்சங்கள், கண்ணோட்டங்கள் மனித சமூகத்திற்குக் கிடைத்தவண்ணமேயுள்ளன என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

ஆகவே மெய்யியலின் உண்மையைத் தேடுதல் என்பது தொடர்ந்து நீண்டு செல்வது. இதனாலேயே மெய்யியலில் பல பிரிவுகள் தோன்றி வளர்ந்து வருகின்றன. இந்த வகையிலே கிறிஸ்தவமும் 'உண்மையைத் தேடுதல்' என்ற இலக்கோடு தனது ஆரம்பத்தில் இருந்து தனக்கேயுரித்தான முறையில் மெய்யியல் சிந்தனைகளை வளர்த்து வந்துள்ளது. சமய மெய்யியலின் ஒரு பகுதியாக இது அமைந்தாலும் மனித சிந்தனைகளை அடியொற்றி அமைவதாலும், உண்மையைத் தேடிச் செல்லும் நோக்கைக் கொண்டிருப்பதாலும் மெய்யியல் என்ற பரந்து விரிந்த வரம்பெல்லைகளுக்குள் இதனையும் இணைக்கமுடிகிறது. இடைவிடாத உண்மையைத் தேடும்

2 Thomas Aquinas, *Summa Theologica*, IIa, IIae. Question 118, Article 1.

மெய்யியலின் முயற்சியில் கிறிஸ்தவ மெய்யியலும் உண்மை பற்றிய கண்ணோட்டங்களை மானிட சமுதாயத்திற்குக் கொடுத்து வருகின்றது.

இதனடிப்படையில் கிறிஸ்தவ மெய்யியல் என்ற கருத்தின் தோற்றம், வளர்ச்சி, அக்கருத்தின் பொருத்தப்பாடு, அது உள்வாங்கிய ஏனைய மெய்யியல் செல்நெறிகள், அது தனித்துவமான முறையில் உருவாக்கி மானிட சமுதாயத்திற்கு வழங்கிய அறிவுக் கருவூலங்கள், மனிதநேய அணுகுமுறைகள் போன்றவற்றை ஆய்வு செய்து முன்வைப்பதாக இந்நூல் அமைகிறது.

கிறிஸ்தவ மெய்யியல் என்பது ஒரு பரந்து விரிந்த துறை. மெய்யியல், சமயவியல், இறையியல், உளவியல், மானிடவியல், வரலாற்றியல் ஆகிய பல மனிதாயதத் துறைகள் ஒன்றிணைந்த ஒரு கற்கைநெறி. பல்கலைக்கழகங்களிலும், குருமடங்களிலும், ஏனைய கிறிஸ்தவ உயர்கல்வி நிறுவனங்களிலும் பயிலும் பட்டதாரி மாணவர்களுக்கு, இறையியல் போன்ற ஏனைய கிறிஸ்தவக் கற்கைநெறிகளோடு கிறிஸ்தவ மெய்யியல் சிந்தனைகளும் கற்பிக்கப்படுவது பாரம்பரியமாக உள்ளது. இது ஐரோப்பிய உயர்கல்வி முறைமையின் ஓர் அம்சமாக உள்ளது. இது மேலே குறிப்பிடப்பட்டுள்ளதைப் போல, மெய்யியல் என்ற கற்கைநெறியின் அடிப்படை இயல்பான 'மனித சிந்தனையை விருத்தி செய்தல்' என்ற நோக்கை மையமாகக் கொண்டே நடைமுறைப்படுத்தப்படுகிறது.

மெய்யியல் உருவாக்கம் (Philosophical Formation) என்பது கல்விப்புல உலகில் அத்தியாவசிமானதாகும். ஏனெனில் மெய்யியலானது திறனாய்வுச் சிந்தனைகளையும், பரந்துபட்ட பார்வைகளையும், மனிதர் தேடியலையும் அடிப்படை உண்மைகளையும் மையமாகக் கொண்டது. கல்விப் புல ஆய்வுகளுக்குள் மெய்யியல் தன்மைகள் புகுத்தப்படவேண்டும் (bring back philosophy into researches) என்பது சமகாலத்திலே ஆய்வு முறையியல் பற்றிப் பேசுவோரினால் அதிகம் வலியுறுத்தப் படுகின்றது. மெய்யியல் ஒரு கற்கைநெறி மட்டுமல்ல; அது ஒரு சிந்தனைப் போக்கு. இருப்புக்களை அவற்றின் அடிப்படையிலே நோக்கும் முறை. நிகழ்வுகளைத் திறனாய்வு முறையில் எடைபோடும் தன்மை. இதனாலேயே

பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய கிறிஸ்தவ உயர்கல்வி நிறுவனங்களில் மெய்யியல் கட்டாயமான ஒருபாட அலகாக உள்ளது.

கிறிஸ்தவ மெய்யியல் சார்ந்து ஏராளமான நூல்கள் ஆங்கிலத்திலும், ஏனைய மொழிகளிலும் தொடர்ந்து வெளிவந்து கொண்டுள்ளன. தமிழ் மொழியில் இதற்கான பற்றாக்குறை உண்டு. ஆகவே தமிழ் மொழியில் கிறிஸ்தவ மெய்யியல் பற்றிய அறிமுகத்தை ஏற்படுத்தவும், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய கிறிஸ்தவ உயர்கல்வி நிறுவனங்களில் தமிழ் மொழியில் பயிலும் மாணவர்களுக்கு மெய்யியல் பற்றியும், குறிப்பாகக் கிறிஸ்தவ மெய்யியல் பற்றியும் புரிதல்களை ஆழப்படுத்தவும் இந்நூல் துணையாக அமையும்.

இந்நூலின் உருவாக்கத்தில் உழைத்த அனைவருக்கும், கருத்துக்களைச் செம்மைப்படுத்த உதவிய கல்விப்புல ஆசான்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்! யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எங்களோடு வாழும், நடமாடும், 'நெற்றிக் கண் திறப்பினும் குற்றம், குற்றமே' என்று திறனாய்வு விவாதங்களில் ஈடுபட்டுக் கருத்துக்களைச் செம்மைப் படுத்தும் அன்புக்குரிய சிரேஷ்ட மெய்யியல் பேராசிரியர் நா. ஞானகுமாரன் அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளார். அவருக்கும் எனது அன்பும், நட்பும் கலந்த நன்றிகள்!

'மெய்ப்பொருள் காண்பது அறிவு!'

போல் றொகான்

**அருட்கலாநிதி யோ.கி. போல் றொகான்**
தலைவர்
கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத்துறைகள்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்
இலங்கை.